## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.54/2023

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணி | மதம் | : இந்து |
| த/பெ | : குப்பையா | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : பொன்பாடி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**17.02.2026**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நானும் என் மனைவியும் ஒன்றாக ஒரே வீட்டில்தான் உள்ளோம் என்றால் ஆமாம். என் சொந்த ஊர் சொந்த வீடு அனைத்தும் பொன்பாடி என்றால் சரிதான். நானும் என் மனைவியும் ஒன்றாகதான் வழக்கறிஞரிடம் வந்தோம் என்றால் ஆமாம். என் வழக்கு தாக்கல் செய்த விவரம் எல்லாம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். நானும் என் மனைவியும் சொல்லித்தான் வழக்கறிஞர் வழக்கை தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கு பதில் தாக்கல் செய்த விவரம் எனக்கும் என் மனைவிக்கும் தெரியும் என்றால் என் மனைவிக்கு தெரியும். என் மனைவி சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தை நான் எந்த வருடம் வாங்கினோம் என்றால் 1983ம் வருடம் வாங்கினேன். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் 2012ல் வாங்கியதாக என் மனைவி சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் 13 வருடம் முன்பு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அங்கு

காலியிடம் உள்ளது என்று என்னிடம் யார் சொன்னார் என்றால் திருவாலங்காடை சேர்ந்த மாணிக்கம் என்ற தரகர் சொன்னார். மாணிக்கம் என்பவர் வழக்கு சொத்திற்கான பட்டாவை காட்டினாரா என்றால் காட்டினார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)